Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 2/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **பாண்டியராஜ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**02.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பாலகிருஷ்ணன் எனதுமாமனார் ஆவார். கடந்த 09.05.2024ம் தேதி மதியம் 01.30 மணியளவில் கஞ்சநாயக்கன்பட்டி விலக்கு அருகே நானும், எனது நண்பரான நவநீதனும் பேசி கொண்டிருந்தோம். அப்போது எனது மாமனார் காந்தி நகரில் இருந்து வந்து மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையை குறுக்கே கடக்க முயற்சி செய்தபோது தெற்கிலிருந்து வடக்காக வந்த சிவப்புநிற ஹுண்டாய் கார் ஒன்று TN 39 BQ 3003 வேகமாக வந்து எனது மாமனார் மீது மோதியது. நான் அருகே சென்று பார்க்கும்போது எனது மாமனாருக்கு வலது கால், நெஞ்சு மற்றும் தலையில் பலத்த காயம் இருந்தது. சம்பவத்தன்று விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டினார் என்று நான் கவனிக்கவில்லை. பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக எங்கள் மாமனாரை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது மாமனாரை பரிசோதனை செய்துவிட்டு மாலை சுமார் 05.00 மணியளவில் அவர் இறந்தவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். பின்னர் நடந்த சம்பவம் தொடர்பாக அன்றே

அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சாலையின் இருபுறமும் கவனிக்காமல் எனது மாமனார் சாலையை கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, மேற்கு புறம் சாலையின் ஓரமாக சாலையை கடப்பதற்காக எனதுமாமனார் நின்று கொண்டிருந்தபோது வாகனம் வேகமாக வந்ததால் முதலில் பேரிகேட்டில் இடித்து அதன்பின்பு தான் எனது மாமனார் மீது வந்து மோதியது. மேற்படி பேரிகேட்டில் இடித்து எனது மாமனார் மீது மோதியதாக நான் தற்போது கூறும் விவரத்தினை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் நான் தற்போது வழக்கிற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. விபத்து நடந்த சத்தம் கேட்ட பிறகு தான் நான் திரும்பி பார்த்தேன் என்றாலும் அதன்பிறகு தான் எனது மாமனார் அங்கு இருந்தார் என்று எனக்கு தெரிய வந்தது என்றாலும் சரிதான். எனது மாமனாருக்கு 82 வயது ஆகிவிட்ட காரணத்தினால் அவர் நிதானமின்றி வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர் சாலையை கடக்க வில்லை, சாலையின் ஆரம்பத்தில் நின்று கொண்டிருந்தார். எனது புகாரில் சாலையை கடக்கும்போது விபத்து நடந்ததாக நான் கூறிவிட்டு தற்போது எனது மாமனார் சாலையை கடக்கவில்லை என்று நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது மாமனார் இறப்பிற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் திரும்பி பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்கு முன்பாக எதிரியின் வாகனமானது வேகமாக வந்தது என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை

என்றால் வாகனம் பேரிகேட் அருகே வந்து கீச் என்று பிரேக் போடும் சத்தம் கேட்டது. அப்போது தான் நான் திரும்பி பார்த்தேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் எனது மாமனாரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**